**செய்தி வெளியீடு எண்: 168** **நாள்: 07.03.2018**

**மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும்**
**காவல் துறை அதிகாரிகள் மாநாடு 2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள்**
**இன்று (7.3.2017) மாலை ஆற்றிய நிறைவுரை**

**மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே**
**மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே**
**மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் அவர்களே**
**மரியாதைக்குரிய உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களே**
**மரியாதைக்குரிய காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களே மற்றும்**
**வருகை தந்திருக்கின்ற**
**காவல் துறை உயர் அதிகாரிகளே**
**மாவட்ட ஆட்சித் தலைவர்களே**
**மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்களே**

**உங்கள் அனைவருக்கும் எனது முதற்கண் வணக்கம்.**

> **"ஏழைகள் ஏழைகளாகவே இருந்துவிடக் கூடாது.**
> **அவர்களது நிலை உயரவேண்டும்! அதற்காகவே**
> **அல்லும் பகலும் நான் உழைத்து வருகிறேன்"**

என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் அன்னாரது எண்ணத்தை நிறைவேற்றும் திசையில் பயணித்து வருகிறது இந்த அரசு.

கடந்த மூன்று நாட்களாக நம்மிடையே நடைபெற்ற கருத்து பரிமாற்றம், தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் தொடர்ந்து கொண்டு செல்லும் விதமாக அமைந்தது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கின்றது. இங்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல் துறை அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்ட ஒவ்வொரு கருத்தும், ஆலோசனைகளும் மாநில வளர்ச்சியில் உங்களுக்கு உள்ள அக்கறையை அறிந்து கொள்ள எனக்கு கிடைத்த வாய்ப்பாகவே நான் உணர்கிறேன்.

முதல் நாளில், மாவட்ட நிர்வாகம் மற்றும் சட்டம் ஒழுங்கு தொடர்பான விவாதங்கள் எடுத்து வைக்கப்பட்டன. இரண்டாவது நாளில், பொது மக்களின் நலன் மற்றும் அவர்களின் தேவைகளை சரியான முறையில் பூர்த்தி செய்வது தொடர்பான விவாதங்கள் நடைபெற்றன. இன்று, காவல் துறை செயல்பாடுகள் குறித்தும் சில இனங்களில், அரசின் உத்தரவை வேண்டியும் காவல் துறை அதிகாரிகள் தங்கள் கருத்துக்களை முன் வைத்தனர். இம்மாநாட்டின் மூலம், இந்த அரசின் கொள்கைகளையும், அரசின் நலத் திட்டங்களையும் முன்னைவிட சிறப்பாக மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டிய அவசியத்தையும் நீங்கள் நன்கு உணர்ந்திருப்பீர்கள் என நம்புகிறேன்.

காவல் துறைக்கு வழங்கப்பட்ட சுதந்திரம் காரணமாக, தமிழ்நாடு அமைதி பூங்காவாக திகழ்கிறது. இந்தியாவிலேயே சட்டம் ஒழுங்கை சிறப்பாக நிர்வகிக்கும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என கூறுவதில் நான் பெருமை அடைகிறேன். இதில் உங்கள் அனைவரின் பங்கும் உள்ளது. அதற்காக உங்களை நான் மனதார பாராட்டுகிறேன்.

இங்கு பரிமாறிக் கொள்ளப்பட்ட கருத்துக்கள் ஏழை, எளிய மக்களின் தேவைகளை நிறைவேற்ற வழிவகை செய்யும் என நான் உறுதியாக நம்புகிறேன். மக்களைச் சென்றடைய வேண்டிய திட்டங்கள், சரிவர அவர்களை சென்று அடைவதை உறுதி செய்வது, களப் பணியாளர்கள் என்ற அளவில் களப் பணியாளர்கள் ஆகிய உங்களது தலையாய கடமையாகும். ஏனென்றால், ஜனநாயகத்தில் மக்கள்தான் எல்லாமுமே. அவர்களுக்கு சேவை செய்ய உங்களுக்கு கிடைத்திருக்கும் இந்த அரிய வாய்ப்பை, அர்ப்பணிப்பு உணர்வுடன் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

அரசின் பல்வேறு நலத்திட்டங்களை திறம்பட செயலாற்றியமைக்காக விருதுபெற உள்ள பல்வேறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாநாட்டில் நீங்கள் முன் வைத்த கோரிக்கைகளை பொறுத்தவரையில், தேவையானவற்றை செய்து கொடுக்க இந்த அரசு தயாராக உள்ளது.

அந்த வகையில், இம்மாநாட்டில் நீங்கள் வைத்த கோரிக்கைகளை பரிசீலித்த பின்னர், கீழ்க்காணும் அறிவிப்புகளை வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

**<u>அரியலூர் மாவட்டம்</u>**

1. ஜெயங்கொண்டம் அரசு தலைமை மருத்துவமனையில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவிற்கு கூடுதல் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும்.

**<u>பெரம்பலூர் மாவட்டம்</u>**

2. சின்னமுட்லூ பகுதியில் தடுப்பணைக்குப் பதிலாக நீர்த்தேக்கம் அமைக்க ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.
3. வேப்பூர் ஒன்றியத்தில் உள்ள பகுதிகளுக்கு வெள்ளாற்றிலிருந்து ஆழ்துளைக் கிணறு அமைத்து குடிநீர் திட்டம் செயல்படுத்துவதற்கான ஆய்வு மேற்கொள்ளப்படும்.

**<u>தஞ்சாவூர் மாவட்டம்</u>**

4. தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், கபிஸ்தலத்தையும் அரியலூர் மாவட்டம் மேலராமநல்லூர் பகுதியையும் இணைக்கும் வண்ணம் கொள்ளிடம் ஆற்றில் 56 கோடி ரூபாய் மதிப்பில் உயர்மட்டப் பாலம் அமைக்கப்படும். இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்

**<u>நாகப்பட்டினம் மாவட்டம்</u>**

5. கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் கூடுதல் நீரேற்று நிலையம் அமைப்பதற்கான ஆய்வு மேற்கொள்ளப்படும்.

**6.** நாகப்பட்டினம் ஆயுதப்படை வளாகத்தில் ஊர்க்காவல் படை பிரிவிற்கு 40 லட்சம் ரூபாய் செலவில் புதிய அலுவலக கட்டடம் கட்டப்படும்.

**7.** வெளிப்பாளையம் காவல் நிலையத்திற்கு ஒரு கோடியே 15 லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டித் தரப்படும்.

**<u>கடலூர் மாவட்டம்</u>**

8. ஆதனூர் – குமாரமங்கலம் இடையே கதவணை கட்டும் பணிக்கான நில எடுப்புப் பணிகள் விரைவுபடுத்தப்படும்.

9. கடலூர், கம்பியம்பேட்டை – செம்மண்டலம் சாலையில் ரயில்வே கடவு எண் 157–இல் ரயில்வே மேம்பாலப் பணியை மேற்கொள்ள ஏதுவாக, ஜவான்ஸ்பவன் சாலை 2 கோடி ரூபாய் மதிப்பில் மேம்படுத்தப்பட்டு, போக்குவரத்து மாற்றுப் பாதையாக பயன்படுத்தப்படும்.

**<u>ராமநாதபுரம் மாவட்டம்</u>**

**10.** கீழக்கரை, வாலிநோக்கம், நயினார்கோயில் மற்றும் பேரையூர் ஆகிய இடங்களில் 4 கோடியே 46 லட்சம் ரூபாய் செலவில் புதிய காவல் நிலைய கட்டடங்கள் கட்டப்படும்.

**11.** முதுகுளத்தூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளருக்கு குடியிருப்பு மற்றும் முகாம் அலுவலகம் 61 லட்சம் ரூபாய் செலவில் கட்டித் தரப்படும்.

**<u>தருமபுரி மாவட்டம்</u>**

12. பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் வழங்கப்படும்.

**<u>கிருஷ்ணகிரி மாவட்டம்</u>**

13. KRP அணையின் பழுதான ஷட்டர்கள் 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

**வேலூர் மாவட்டம்**

**14.** காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளில் உள்ள தண்ணீர் பற்றாக்குறையைப் போக்க ஒரு கோடியே **19** லட்சம் ரூபாய் செலவில் பல்வேறு இடங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்படும்.

**விருதுநகர் மாவட்டம்**

**15.** விருதுநகர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள அவசர சிகிச்சைப் பிரிவிற்கு **1.10** கோடி ரூபாய் செலவில் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டு தரம் உயர்த்தப்படும்.

**16.** சிவகாசி காவலர் மருந்தக கட்டடம் **77** லட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்படும்.

**புதுக்கோட்டை மாவட்டம்**

**17.** புதுக்கோட்டையில் நூறு காவலர்கள் தங்குவதற்கான துயிற்கூடம் ஒரு கோடியே **80** லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**திருவாரூர் மாவட்டம்**

**18.** நன்னிலம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, கோட்டூர், திருவாரூர் மற்றும் கொரடாச்சேரி ஆகிய பகுதிகளுக்கு கும்பகோணம் அருகில் உள்ள கருகூர் மற்றும் கடம்பகுடி கொள்ளிடம் ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர் திட்டம் அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்படும்.

**19.** திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் நகராட்சி பகுதியில் மா.நெ.எண் **202,** திருவாரூர் **–** மன்னார்குடி – முத்துப்பேட்டை சாலை கி.மீ. **13/0 –** கி.மீ.**17/0** – இல் முடியும் சுமார் **5.6** கி.மீ. நீளத்திற்கு **53** கோடி ரூபாய் மதிப்பில் புறவழிச் சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

**20.** திருவாரூர் மாவட்டத்தில் புதிய கிராம சுகாதார செவிலியர் பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்கப்படும்.

**21.** மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனைக்கு **20** லட்சம் ரூபாய் செலவில் குருதி சேமிப்பு வங்கி அமைக்கப்படும்.

22. திருவாரூர் மாவட்ட ஊர்க்காவல் படைக்கு 38 லட்சம் ரூபாய் செலவில் அலுவலகக் கட்டடம் கட்டித் தரப்படும்.

**காஞ்சிபுரம் மாவட்டம்**

23. காஞ்சிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவிற்கு கூடுதல் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும்.

**திருவள்ளூர் மாவட்டம்**

24. திருவள்ளூர் மாவட்ட ஆயுதப் படை, கவரப்பேட்டை காவல் நிலைய காவலர் குடியிருப்பு மற்றும் 2 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டித் தரப்படும்.

**திண்டுக்கல் மாவட்டம்**

25. கொடைக்கானல் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளருக்கு குடியிருப்பு மற்றும் முகாம் அலுவலகம் ஒரு கோடியே 23 லட்சம் ரூபாய் செலவில் கட்டித் தரப்படும்.

26. ஒட்டன்சத்திரத்தில் 25 குடியிருப்புகள், கன்னிவாடியில் 3 குடியிருப்புகள் என மொத்தம் 28 காவலர்களுக்கான குடியிருப்புகள் 5 கோடியே 5 லட்சம் ரூபாய் செலவில் கட்டித் தரப்படும்.

**மதுரை மாவட்டம்**

27. வைகை ஆற்றின் குறுக்கே மாடக்குளத்தில் படுகை அணை 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

28. மதுரை மாவட்டம், வைகை ஆற்றின் குறுக்கே மண்ணடிமங்களத்தையும் இரும்படியையும் இணைக்கும் வகையில் உயர்மட்டப் பாலம் அமைக்கும் பணி 18 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

29. தேசிய சிறார் நலத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு மன நல ஆலோசனைகள் வழங்கப்படும்.

**தேனி மாவட்டம்**

**30.** ஆண்டிப்பட்டி மற்றும் மயிலாடும்பாறை ஒன்றியங்களில் விடுபட்டுப் போன பகுதிகளுக்கு வைகை அணைக்கு கீழ் பகுதியிலிருந்து புதிய கூட்டுக் குடிநீர் அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்படும்.

**31.** தேனி மாவட்டம், விவசாயத் தொழிலாளர்கள் தேயிலைத் தோட்டம் செல்வதற்கு கம்பம் மெட்டு 78 கி.மீ. சுற்றிச் செல்வதற்குப் பதிலாக, சாக்களத்து மெட்டு பகுதியில் 19 கி.மீ. நீளத்திற்கு சாலை வசதி ஏற்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

**32.** தேனி மாவட்டம், மேகமலை மற்றும் ஹைவேவிஸ் பகுதியில் இரண்டாம் கட்டமாக 13 கி.மீ. நீளத்திற்குச் சாலை வசதி ஏற்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

**33.** தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மகப்பேறு மற்றும் குழந்தை நலப்பிரிவு விரிவாக்கம் செய்யப்படும்.

**34.** ஒரு கோடியே 5 லட்சம் ரூபாய் செலவில் தேனி காவல் துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டித் தரப்படும்.

**சேலம் மாவட்டம்**

**35.** அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துமனைக்கு அவசர விபத்து சிகிச்சை பிரிவிற்கு தேவையான மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்.

**36.** ஓமலூரில் காவல் துறையினருக்கு ஒரு கோடியே 96 லட்சம் ரூபாய் செலவில் சமுதாயக் கூடம் கட்டப்படும்.

**37.** தேவூர் காவல் நிலையத்திற்கு ஒரு கோடியே ஒரு லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டித் தரப்படும்.

**38.** ஆத்தூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலுவலகத்திற்கு 45 லட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படும்.

**39.** சேலம் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவிற்கு 65 லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டித் தரப்படும்.

**கரூர் மாவட்டம்**

**40.** கரூர் மாவட்டத்தில் இரண்டு கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் நான்கு துணை காவல் கண்காணிப்பாளர்களுக்காக 6 குடியிருப்புகள் கட்டித் தரப்படும்.

**நாமக்கல் மாவட்டம்**

**41.** குமாரபாளையம் நெடுஞ்சாலை பாதுகாப்புப் பணிக்கு புதியதாக ஒரு காவல் அலகு அமைத்துத் தரப்படும்.

**சிவகங்கை மாவட்டம்**

42. 12 சிறு குடிநீர் திட்டங்களின் நீர் ஆதாரங்களை பெருக்கும் பொருட்டு புதிய ஆழ்துளை கிணறுகள் அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்படும்.

**43.** சிவகங்கை அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு 70 லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டித் தரப்படும்.

**நீலகிரி மாவட்டம்**

44. 1969–ஆம் ஆண்டு கூடலூர் ஜன்மம் நில (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரிக்கு மாற்றுதல்) சட்டத்தின் கீழ் கூடலூர் ஜன்மத்திற்கு உட்பட்ட நிலங்களை தீர்வு செய்வதற்கான எஞ்சிய பணிகளை விரைவில் முடிப்பதற்கு, மூன்று நபர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படும். இக்குழுவில், நீலகிரி மாவட்டத்தில் ஏற்கெனவே பணிபுரிந்துள்ள மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரும், வன அதிகாரி ஒருவரும், வருவாய்த் துறை அதிகாரி ஒருவரும் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவார்கள். உள்ளூரில் வசிப்பவர்கள்,

குறிப்பாக பழங்குடியினர்களின் நியாயமான கோரிக்கைகளை கருத்தில் கொண்டு இப்பணிகளை விரைவுபடுத்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

45. மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவிற்கு கூடுதல் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

<u>கோயம்புத்தூர் மாவட்டம்</u>

46. கோயம்புத்தூர் மாவட்டத்தின் முக்கியச் சாலையான திருச்சி பிரதான சாலையில் சிங்காநல்லூர், ராமநாதபுரம், சுங்கம் ஆகிய மூன்று முக்கிய சந்திப்புகளில் மேம்பாலம் அமைக்கும் பணி தேசிய நெடுஞ்சாலை அலகின் மூலம் 2018–19ல் மேற்கொள்ளப்படும்

47. கோயம்புத்தூர் மாவட்டம், திருச்சி சாலை, L&T சாலையில் மேம்பாலம் அமைக்கும் பணி, தேசிய நெடுஞ்சாலை அலகின் மூலம் 2018–19ல் மேற்கொள்ளப்படும்.

48. கோயம்புத்தூர் மாவட்டம், ஊட்டி செல்லும் துடியலூர் சாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் பணி தேசிய நெடுஞ்சாலை அலகின் மூலம் 2018–19ல் மேற்கொள்ளப்படும்

49. கோயம்புத்தூர் மாவட்டம், மருதமலைக்கு எளிதாகச் செல்லும் வகையில் லாலி ரோடு அருகே ஒரு பாலம் அமைக்கும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

50. கோயம்புத்தூர் மாவட்டம், சாய்பாபா கோயில் சந்திப்பு, துடியலூர் சந்திப்பு மற்றும் நரசிம்மநாயக்கன்பாளையம் சந்திப்பு ஆகிய இடங்களில் மேம்பாலம் அமைக்கும் பணி தேசிய நெடுஞ்சாலை அலகின் மூலம் 2018–19ல் மேற்கொள்ளப்படும்.

<u>ஈரோடு மாவட்டம்</u>

51. ஈரோடு மாவட்டம், அந்தியூரில் ஒரு புதிய போக்குவரத்து காவல் நிலையம் ஏற்படுத்தப்படும்.

**திருப்பூர் மாவட்டம்**

52. திருப்பூர் மாவட்டம், பல்லடம் புறவழிச் சாலை 8.3 கிலோ மீட்டர் நீளம் அமைக்கும் பணியில், முதற்கட்டமாக விரிவான திட்ட அறிக்கை நெடுஞ்சாலைத் துறையால் தயாரிக்கப்படும்.

53. உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 200 படுக்கைகள் கொண்ட பொதுப் பிரிவு ஏற்படுத்தப்படும். மேலும், 1.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக C.T. ஸ்கேன் வசதி செய்து கொடுக்கப்படும்.

54. பல்லடம் உட்கோட்டத்தில் உள்ள மங்கலம் காவல் நிலைய காவல் ஆளிநர்களுக்கு 80 குடியிருப்புகள் 11 கோடியே 47 லட்சம் ரூபாய் செலவில் கட்டித் தரப்படும்.

**திருநெல்வேலி மாவட்டம்**

55. சங்கரன்கோவிலில் போக்குவரத்து காவல் நிலையத்திற்கு 96 லட்சம் ரூபாய் செலவில் கட்டிடம் கட்டித் தரப்படும்.

56. தென்காசி போக்குவரத்து காவல் நிலையத்திற்கு 69 லட்சம் ரூபாய் செலவில் கட்டிடம் கட்டித் தரப்படும்.

57. சங்கரன்கோவில் நகர காவல் நிலையத்திற்கு ஒரு கோடியே 29 லட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டித் தரப்படும்.

58. திருநெல்வேலி மாவட்டம் மானூரில் 52 குடியிருப்புகளும், ஊத்தமலையில் 34 குடியிருப்புகளும் என மொத்தம் 86 காவலர் குடியிருப்புகள் 15 கோடியே 95 லட்சம் ரூபாய் செலவில் கட்டித் தரப்படும்.

**தூத்துக்குடி மாவட்டம்**

59. தூத்துக்குடி மாவட்டம், NH-7 மற்றும் NH-45யும் இணைக்கும் கயத்தாறு – கடம்பூர், பசுவந்தனை –எப்போதும் வென்றான் ஆகிய சாலைகளை 31 கோடி ரூபாய் மதிப்பில் அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி 2018–19 மற்றும் 2019–20ல் CRIDP திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

**60.** தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு மருத்துவ உபகரணங்கள் **8.95** கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். இப்பிரிவிற்கு **6** மருத்துவர்கள், **25** செவிலியர்கள் உள்ளிட்ட **31** கூடுதல் பணியிடங்கள் உருவாக்கப்படும்.

61. தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்று நோய் சிகிச்சைக்காக **16** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன லீனியர் ஆக்ஸிலேட்டர் (Linear Accelerator) கருவி அமைக்கப்படும்.

**62.** நாலாட்டின்புத்தூர் காவல் நிலையத்திற்கு ஒரு கோடியே **4** லட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டித் தரப்படும்.

**63.** தூத்துக்குடி மத்திய காவல் நிலையத்திற்கு ஒரு கோடியே **2** லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டித் தரப்படும்.

**கன்னியாகுமரி மாவட்டம்**

64. கன்னியாகுமரி மாவட்ட கடலோரங்களில் ஏற்படும் கடலரிப்பு தடுப்புப் பணிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கோள்ளப்படும்.

**65.** மேலும் அவசரகால பணியாக வல்லவிளை துறையில் கடல் அரிப்பைத் தடுக்க **94** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம்**

**66.** திருச்சி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் மணப்பாறை அரசு மருத்துவமனைகளுக்கு தேவைப்படும் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்.

**67.** திருச்சி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிசு அவசர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்படும். இனாம்குளத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர்

மற்றும் 8 காவலர்களுக்கு ஒரு கோடியே 62 லட்சம் ரூபாய் செலவில் குடியிருப்புகள் கட்டித் தரப்படும்.

68. இனாம்குளத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் மற்றும் 8 காவலர்களுக்கு ஒரு கோடியே 62 லட்சம் ரூபாய் செலவில் குடியிருப்புகள் கட்டித் தரப்படும்.

69. ஜீயபுரம் காவல் துணை கண்காணிப்பாளருக்கு 61 லட்சம் ரூபாய் செலவில் குடியிருப்பு மற்றும் முகாம் அலுவலகம் கட்டித் தரப்படும்.

**திருவண்ணாமலை மாவட்டம்**

70. திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம் இரும்பேடு கிராமத்தில், கமண்டல நாக நதியின் குறுக்கே புதுப்பாடியில் உயர்மட்டப் பாலம் கட்டப்படும். இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

71. திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம் புதுப்பாடி – இலுப்பை – வடஇலுப்பை – பெரும்பாக்கம் – விஷார் – காஞ்சிபுரம் மாநில நெடுஞ்சாலை சாலை 116ஏ கிலோ மீட்டர் 24/8ல் 31 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பில் உயர் மட்டப் பாலம் அமைக்கப்படும். முதற்கட்டமாக இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

72. திருவண்ணாமலை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சிறுநீரக சிகிச்சைப் பிரிவிற்கான டயாலிசிஸ் கருவிகள் வழங்கப்படும்.

73. செய்யாறு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு 50 இலட்சம் ரூபாய் செலவில், அவசர விபத்து சிகிச்சை பிரிவிற்கு தேவையான மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்.

**விழுப்புரம் மாவட்டம்**

74. விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் அருள்மிகு அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயிலுக்கு செல்லக்கூடிய 26 கிமீ நீளமுள்ள 4 நெடுஞ்சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி 18 கோடியே 64 லட்சம் ரூபாய் மதிப்பில் 2018–19 மற்றும் 2019–20ல் CRIDP திட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

75. விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் புற்று நோய் சிகிச்சைக்குத் தேவையான வசதியை ஏற்படுத்த சுமார் 5.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோபால்ட் உயர்ரக கதிரியக்க சிகிச்சை கருவியும் அதன் உபகரணங்களும் வழங்கப்படும்.

76. விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவு மேம்படுத்தப்படும்.

77. உளுந்தூர்பேட்டை பகுதியில் நிகழும் சாலை விபத்துகளைத் தடுக்க 83 லட்சம் ரூபாய் செலவில் புதிய போக்குவரத்து காவல் நிலையம் அமைக்கப்படும்.

78. கோட்டக்குப்பம் காவல் துணை கண்காணிப்பாளருக்கு 79 லட்சம் ரூபாய் செலவில் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டித் தரப்படும்.

**சென்னை மாவட்டம்**

79. சென்னை பெருநகர காவல் துறையில் பணியாற்றும் காவலர்களின் குழந்தைகளுக்காக புதுப்பேட்டை மற்றும் புனித தோமையார் மலை ஆகிய இடங்களில் விளையாட்டு பள்ளிகளுடன் கூடிய குழந்தைகள் காப்பகம் தலா 75 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

80. டி–7 அண்ணா சதுக்கம் காவல் நிலையத்திற்கு, அண்ணா நினைவிடம், எம்.ஜி.ஆர். நினைவிடம் மற்றும் அம்மா நினைவிடத்திற்கு அருகில் 75 லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டித் தரப்படும்.

81. சென்னை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை தலைமையகத்தில் 6 கோடி ரூபாய் மதிப்பில் ஒரு நவீன கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்படும்.

82. தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை (TEDA) மூலமாக ஒரு கோடியே 53 லட்சம் ரூபாய் மதிப்பில் சூரிய மின்சக்தி திட்டம் அமைக்கப்படும்.

83. 'அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது' என்ற ஔவையாரின் வாக்கின்படி, அரிய மனித உயிர்களை விபத்திலிருந்து காக்கும் உன்னதமான சேவையில் அதிக ஈடுபாட்டோடு செயல்படும் முதல் மூன்று மாவட்டங்கள் மற்றும் ஒரு மாநகரத்திற்கு ஆண்டுதோறும் "தமிழ்நாடு முதலமைச்சரின் விபத்து குறைப்பிற்கான சிறந்த மாவட்டம் மற்றும் சிறந்த நகரத்திற்கான விருது" வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

84. காவல் நிலையங்களில் மேம்பட்ட சேவையை மக்களுக்கு வழங்குவதை ஊக்கப்படுத்தும் வகையில், ஆண்டுதோறும் சிறப்பாக செயல்படும் மூன்று காவல் நிலையங்களைத் தேர்ந்தெடுத்து "தமிழ்நாடு முதலமைச்சரின் சிறந்த காவல் நிலையத்திற்கான கோப்பை" வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிவிப்புகள் உங்களுக்கு மன நிறைவையும், தமிழ்நாட்டு மக்களுக்கு நற்பயன்களையும் அளிக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

இதுவரையில் நீங்கள் செய்த சிறப்பான பணிகளை பாராட்டும் அதே வேளையில், வரும் ஆண்டில் உங்கள் பணி மேலும் சிறக்கவேண்டும் என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

**"இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழகத்தை உருவாக்கவேண்டும்! அந்த லட்சியத்தை நோக்கிய பயணத்தில் நாம் தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறோம்",**

என்று கூறிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் லட்சியத்தை நிறைவேற்ற தொடர்ந்து நாம் அனைவரும் பாடுபடுவோம்.

நன்றி!

வணக்கம்!

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**